27th March 1969]

City Compensatory Allowance

* 244 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether Lecturers in private colleges in the City of Madurai are eligible for the City Compensatory Allowance sanctioned by the Government ; and

(b) if so, whether it is being paid to them since 1st April 1968 ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ), (இ) : மதுரை மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள அரசு மானியம் பெறும் கல்லூரிகளில் ஆசிரியர்களுக்கும், ஏனைய பணியாளர்களுக்கும் 1—4—1968 முதல் நகர ஈட்டுப்படி வழங்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

Pusaripatti Panchayat Union School

* 246 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether any orders have been issued for starting a Panchayat Union School at Pusaripatti in Nilakkottai taluk of Madurai district even though a private managed elementary school was functioning there;

(b) if so, the population of that Village; and

(c) the number of students over five years of age studying in each of the schools ?

பஞ்சாயத்து ஒன்றிப்பு பள்ளி, பூசாரிப்பட்டி.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன்) : சார்பில் மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட நிலக் கோட்டை தாலுகா பூசாரிப்பட்டியில் தனியார் ஆரம்பப் பள்ளி ஒன்று நடந்து வரும்பொழுது, பஞ்சாயத்து ஒன்றிப்பு பள்ளி ஒன்று துவக்க உத்தரவிடப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அக் கிராமத்தின் ஜனத் தொகை என்ன ?

(உ) இவ்விரு பள்ளிகளிலும் தனித்தனியே ஐந்து வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் எத்தனை பேர் படிக்கின்றனர் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 1274.

(உ) உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் 46 மாணவர்களும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 166 மாணவர்களும் படிக்கின்றனர்.